Department of Education,Sabaragamuwa Province/ Weekly School

# சபரகமுவ மாகாண கல்வித் திணைக்களம்

## வாரப் பாடசாலை

## செயலட்டை - 05

வாரம் -01

பாடம் :- பொருளியல்

தரம்:- 13

தயாரிப்பு:- திருமதி .F. றிஸ்லா BA (Hons)
இ/ ஸ்ரீ கிருஷ்ணா மகா வித்தியாலயம்

**தேர்ச்சி 11.0 :- அபிவிருத்தியின் பன்முகத்தன்மையினை விளக்கி நிலைபேறான அபிவிருத்திக்கு பங்களிப்பதற்கான விருப்பத்தினை விளக்குவார்.**

**தேர்ச்சி மட்டம் 11.4:- வருமானச் சமமின்மையை கணிப்பீடு செய்வதற்கு பயன்படுத்தும் ஏற்றுக் கொள்ளப்பட்ட முறைகளை பரிசீலனை செய்வார்.**

**வருமான ஏற்றத்தாழ்வு :-** குறித்த ஒரு நாட்டில் வருமானம் பங்கீடு செய்யப்பட்ட முறையில் காணப்படுகின்ற ஏற்றத்தாழ்வினையே வருமான ஏற்றத்தாழ்வு எனப்படுகின்றது.

**<u>வருமானப் பரம்பலின் இரு அணுகுமுறைகள்</u>**

1. தொழிற்பாட்டு ரீதியான வருமானப் பரம்பல்
2. தனிநபர் வருமானப் பரம்பல்

**<u>பின்வரும் எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.</u>**

1. வருமானப்பரம்பல் சமமின்மை என்றால் என்ன?
2. தொழிற்பாட்டு ரீதியான வருமானப் பரம்பல், தனிநபர் வருமான பரம்பல் ஆகியவற்றை வரைவிலக்கணப்படுத்துக.
3. முழு வருமானப் பரம்பல், ஒப்பீட்டு வருமான பரம்பல் ஆகியவற்றை விளக்குக.
4. சார்பு வருமானப் பரம்பலை அளவிடப் பயன்படும் அளவீடுகள் யாவை?
5. கினி குணத்துடன் ஒப்பிடும் போது லோரன்ஸ் வளையியின் முக்கியத்துவம் யாது?
6. ஐயணைப்பரவல் விகிதம் என்றால் என்ன? இதன் பிரிவுகளை விளக்குக.